# மட்டக்களப்பு தேசத்து வழிபாட்டு மரபுகளில் பத்ததிகள்: கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு

**வ. குணபாலசிங்கம்**[1]

## ஆய்வுச்சுருக்கம்:

*இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை 1960களுக்கு முன்னர் மட்டக்களப்பு தேசம் என அழைக்கும் வழக்கம் நிலவியது. மட்டக்களப்பு தேசத்தில் வழக்கிலுள்ள வழிபாட்டு மரபுகளை இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்க முடியும். அவற்றிலே ஆகம, சிற்பசாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவது ஒரு வகை, மற்றைய வகை, மரபு வழியாகப் பேணப்பட்டும், பத்ததிகளை ஆதாரமாகக் கொண்டும் இயற்றப்படுவது ஆகும். மேற்குறிப்பிட்ட இரண்டாம் வகைக்குரிய வழிபாட்டு மரபுகளே இப்பிராந்தியத்தில் பிரசித்தமானவை. இவ்வகை வழிபாட்டில் பத்ததிகளின் வகிபாகம் இன்றியமையாதது. வழிபாட்டிற்குரிய பூசைவிதி முறைகளையும் அதற்கான மந்திரங்களையும், பாவனைகளையும் தொகுத்துக் கூறும் விதி நூலே பத்ததிகள் ஆகும். பத்ததியைப் பத்தாசி எனவும் அழைப்பர். பத்தாசி என்பது மட்டக்களப்பு தேசத்து மக்கள் மத்தியில் பயில்நிலையில் உள்ள பிரதேச வழக்காற்றுச் சொற்பதமாகும். அவற்றிலே பல உபபிரிவுகளும் உள்ளன. கண்ணகையம்மன் பத்ததியில், கூனற்பலகை விதிமுறை, திரைசேர்மடந்தைப்பத்ததி, சிங்களப்பத்ததி, குளக்கட்டுப்பத்ததி எனப் பல உபபிரிவுகளும் உண்டு. இவை பிரதேசத்திற்குப் பிரதேசம் கோயிலுக்கு கோயில் வேறுபடுகின்றன. கன்னன்குடா கண்ணகையம்மன் கோயில் வழிபாட்டுக்கு ஆதாரமான பத்ததி கூனற்பலகை விதிமுறையாகும். இப்பத்ததியில் பூசகர் விதிமுறை, கங்கை அரட்டுதல் (தீர்த்தம் எடுத்தல்) கதவு திறத்தல், கும்பம் வைத்தல், மடை வைத்தல், மந்திரப்பானை, செயல்முறை, யந்திரங்கள் முதலிய இன்னோரன்ன அம்சங்கள் காணத்தக்கன. பத்ததிகள் வழிபாட்டை நெறிப்படுத்தும் விதிநூல்கள் என்ற வகையில் அவற்றின் தோற்றம் தொடர்பான காலத்தினை அறிதல், ஏனைய தெய்வ வழிபாடுகளைக் கூறுகின்ற பத்ததிகளுடன் கூனற்பலகை விதிமுறையினை ஒப்பு நோக்குதல், பொதுவாகப் பத்ததிகளுக்கிடையிலான பொதுமைகளையும், தனித்துவங்களையும் இனங்காணுதல் முதலியன இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வுக்கு முதல்நிலைத் தரவுகளாகத் தற்காலத்தில் வழக்கிலுள்ள பத்ததிகளும், இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பத்ததிகள் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளக் குறிப்புகள் ஆகியன உபயோகிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இந்த ஆய்வு வரலாற்றியல் ஆய்வு முறையியல், விபரண ஆய்வு முறையியல் மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறையியலைப் பின்பற்றிச் செய்யப்படுகின்றது. ஆய்வின் முடிவாக, மட்டக்களப்பில் பத்ததி முறையிலான வழிபாடுகள் சம்ஸ்கிருதமயமாக்கம் காரணமாகத் தனித்துவங்களை இழந்துவரும் அதேவேளை பழமையான பத்ததிகளும் மறைபொருளாக்கப்பட்டுள்ளன. பத்ததிகளைக் குறித்த பரம்பரையினர் தவிர ஏனையோர் கைகளுக்கு சேரக்கூடாது என்ற மனோநிலை காரணமாக பல பத்ததிகள் அழிந்து போயுள்ளன. எஞ்சியுள்ள பத்ததிகளில் கன்னன்குடா கண்ணகையம்மன்பத்ததியும் ஒன்று. இப்பத்ததி வாய்மொழி மரபாக இருந்து, ஏட்டு வடிவில் எழுதப்பெற்று பின்னர் கையெழுத்துப் பிரதியாக மாற்றம் பெற்று அச்சுருப்பெற்றுள்ளமை மட்டக்களப்பில் பத்ததி தொடர்பாகக் காணத்தக்க ஒரு சிறந்த முன்னேற்றமாகும்.*

**திறவுச்சொற்கள்:** மட்டக்களப்பு தேசம், பத்ததி, வழிபாடு, கூனற்பலகை விதிமுறை, கண்ணகையம்மன் வழிபாடு

[1] *இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.*
*/gunapalasingamv@esn.ac.lk*

**அறிமுகம்**

மட்டக்களப்புத் தேசத்து வழிபாட்டு மரபுகளில் கண்ணகையம்மன் வழிபாடு பிரசித்தமானது. இவ்வழிபாடு கிழக்கிலங்கை இந்துப் பண்பாட்டின் பௌதிக இயக்கத்தின் மையப்புள்ளியாகும். அத்துடன் காலநிலை சார்ந்த அம்சங்களுடன் இவ்வழிபாடு இணைவு பெற்றுக் காணப்படுகின்றமை முக்கியமான அம்சமாகும். கண்ணகையம்மன் வழிபாடு சடங்குப்பாடல்களாலும், பத்ததிகளாலும் நெறிப்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்பில் இயற்றப்படுகின்ற மரபுவழியான வழிபாட்டிற்குரிய பூசை விதிமுறைகளையும் அதற்கான மந்திரங்களையும், பாவனைகளையும் தொகுத்துக் கூறும் ஆவணமே பத்ததி எனப்படுகின்றது. (குணபாலசிங்கம்,வ., 2015:256) பத்ததியைப் பத்தாசி எனவும் அழைப்பர். பத்தாசி என்பது மட்டக்களப்பு தேசத்து மக்கள் மத்தியில் பயில் நிலையில் உள்ள பிரதேச வழக்காற்றுச் சொற்பதமாகும். வசதி கருதி இங்கு பத்ததி எனும் சொல்லே எடுத்தாளப் படுகின்றது. சைவத்திருக்கோயில் கிரியை நெறிகளை வடமொழி ஆகமப் பத்ததிகள் நெறிப்படுத்துவது போன்று, மட்டக்களப்பு தேசத்துப் பாரம்பரிய வழிபாடுகளை நெறிப்படுத்துபவை தமிழில் அமைந்த பத்தாசிகள் எனப்படும் பத்ததிகளாகும். இவ்விரு பத்ததிகளும் கோயில் வழிபாடுகளை கூறுவதில் பொதுமைப்பட்டிருப்பினும், அவற்றின் உள்ளடக்கம் சார் விடயங்களிற் தனித்துவங்களைக் கொண்டிருப்பது மிகுந்த அவதானத்திற்குரியது.

மரபு வழியான வழிபாடுகளை விதந்துரைக்கும் பத்ததிகள் விரிவான ஆராய்ச்சிக்குரியவை. இவ்வாராய்ச்சிக் குறிப்புப் பத்ததி பற்றிய ஆய்வுக்கு ஓர் அறிமுகமாக அமைந்துள்ளது. ஆய்வின் வசதி கருதி கிழக்கிலங்கைக் கண்ணகையம்மன் பத்ததிகளில் கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதிமுறையை மையப்படுத்திய தாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

பத்ததிகள் எத்தெய்வத்தின் பூசை விதிமுறைகளைக் கூறுகின்றனவோ அத்தெய்வத்தின் பெயராலேயே பெரும்பாலும் அழைக்கப்படுகின்றன. புறநடையாகச் சில பத்ததிகள் வேறு பெயர்களாலேயும் அழைக்கப்படுகின்றன. பெரியதம்பிரான் பத்ததி, பரமநயினார் பத்ததி, மாரியம்மன் பத்ததி, காளியம்மன் பத்ததி, திரௌபதையம்மன் வழிபாட்டை திரௌபதையம்மன் விதி நூலும், மாரியம்மன் பத்ததியில் அமுதகலசப் பத்ததி என்ற ஒரு வகையும், காளியம்மன் பத்ததியில் கும்பப்பத்ததி, அடையற் பத்ததி என்ற இருவகைப் பத்ததியும் உண்டு. கண்ணகையம்மனுக்குரிய வழிபாட்டு விதிமுறைகளைக் கூறுகின்ற பத்ததி கூனற் பலகை பத்ததி, குருக்கள் கோடாலிப் பத்ததி, தேவேந்திரன் பத்ததி, குளக்கட்டுப் பத்ததி, கொம்புப் பத்ததி, கன்னிமார் பத்ததி, வேடப் பத்ததி, சிங்களப் பத்ததி எனப்பலவகையுண்டு.

கிழக்கிலங்கையில் இயற்றப்படுகின்ற பாரம்பரிய வழிபாடுகளுக்கு ஆதாரமாக விளங்குகின்ற பத்ததிகள் பொதுவாகப் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. வழிபாட்டிடம் அமைக்கும் முறை, மண்டபம் காவல் செய்யும் முறை, அம்மனுக்கு அடுக்குச் சாத்தும் முறை, அம்மனை கும்பத்தில் வைத்தலும் அவைகளுக்கான மடைப்பிரிவுகள் பற்றியும் கூறுகின்றன. அத்துடன் அம்மனுக்கு இணை, துணை, பரிவாரத்தெய்வங்களை நிறுத்தும் இடம் பற்றியவையும் அவைகளுக்கான மடைப்பிரிவுகள் பற்றிய தகவல்களையும் கூறுகின்றன. மற்றும் அவற்றிலே மந்திர, யந்திரங்களும், தெய்வங்களை ஆராதிக்கும் முறைகள், பூசை செய்பவர் கைக்கொள்ள வேண்டிய அனுட்டான முறைகள் முதலிய விதிகளும் பிறவும் அடங்கும்.

## கன்னன்குடா கண்ணகையம்மன் கோயிலும் வழிபாட்டு முறைகளும்

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே 4 கி.மீ தொலைவில் கன்னன்குடாக் கிராமம் அமைந்துள்ளது. கன்னன்குடா வவுணதீவு பிரதேச செயலகத்தின் நிருவாக எல்லைக்குட்பட்டது. மட்டக்களப்பு நகரையும் கன்னன்குடா கிராமத்தையும் பிரிப்பது மட்டக்களப்பு வாவி ஆகும். இக்கிராமத்திலுள்ள கோயில்களிலே பழமை மிகுந்த கோயிலாகக் கொள்ளப்படுவது கண்ணகையம்மன் கோயில் ஆகும். அவற்றின் தோற்றம் தொடர்பாக பல மரபுவழிக் கதைகள் வழக்கிலுள்ளன. அவற்றிலே குறிப்பிடப்படுகின்ற கதைகளை ஆதாரமாகக் கொண்டு கோயில் உருவான காலத்தை சரியாக நிர்ணயம் செய்யமுடியாதுள்ளது. இருப்பினும் கோயில் மீது 1981ஆம் ஆண்டு மா.சிதம்பரப்பிள்ளை புலவரால் பாடப்பட்ட காவியம் ஒன்றிலே,

**“ ……………………………………………**
**நொந்துருகி உந்தனையே பாடுகின்றேன் அம்மா**
**நோக்கமுடனே எனது வாக்கினிலே வாரும்**
**விந்தையுடன் இருநூறு ஆண்டிற்கு முன்னே**
**விரும்பியே நீ இங்கு தேத்தா மரந்தன்னில்**
**சந்தோசமாகவே குடிகொள்ள வந்த**
**தாயான கண்ணகி…………………………..”**

என வருகின்ற வரிகள் கவனத்திற்குரியவை ஆகும். அவரது கணிப்பீட்டின் பிரகாரம் கோயிலின் தோற்றம் 1700ஆம் ஆண்டு எனக்கொள்ள முடிகின்றது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் மரத்தினாற் செய்யப்பட்ட கதவு நிலையொன்றில் தமிழ் எழுத்திலாலான கசசச(1444) என்ற இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. (ஆய்வாளர் பங்குபற்றுதல் அவதானம் 15.06.2021) அக்கதவு நிலை தற்பொழுது கோயிலின் சந்தன மண்டபத்தில் காணப்படுகின்றது. 1886ஆம் ஆண்டு திமிலைதீவில் இருந்து கன்னன்குடாவிற்கு நிகழ்ந்தேறிய குடியேற்றம் பற்றிய

தகவல் ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே கோயிலின் தோற்றம் பற்றிய தகவல் ஐரோப்பியர் காலம் அளவிற்குப் பழமையானது எனக்கொள்ள முடிகின்றது. கோயிலின் தோற்ற காலம் முதலாகவே அங்கு பத்ததி முறையிலான வழிபாடே நடைபெற்று வந்துள்ளது. கண்ணகையம்மன் வழிபாட்டினைக் கூறுகின்ற இப்பத்ததியில் குருக்கள் கோடாலி, கூனற்பலகை ஆகிய விதிமுறைகள் காணத்தக்கன. அவற்றிலே தற்காலம் வழக்கிலுள்ள விதி முறை கூனற்பலகை விதிமுறையாகும்.

**கூனற்பலகை விதிமுறை**

கன்னன்குடா கண்ணகையம்மன் கோயிற் சடங்கினை நெறிப்படுத்துவது கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதிமுறை ஆகும். கூனல் என்றால் வளைவு என்ற பொருளைத் தமிழ் அகராதிகள் கூறுகின்றன. (Visvanathapillai, V. (பதி)., (2004) எனவே கூனற்பலகை என்பது வளைந்த பலகை என்ற பொருளைத்தருகின்றன. மேலும் பல சான்றுகளின் மூலம் இச்சொற்பதத்தினை நோக்குகையில்.

**“ ஏனற் புனம்நீடும் ஈங்கோயே தேங்குபுனல்**

**கூனற் பிறையணிந்தான் குன்று…”**(திரு ஈங்கோய்மலை எழுபது,63:வரி 3 - 4)

என பதினோராம் திருமுறையில் நக்கீரதேவரின் திருஈங்கோய்மலை எழுபது என்னும் பிரபந்தத்தில் **கூனற்பிறை** என்ற சொற்பதம் காணப்படுகின்றது. இதற்கு வளைந்த சந்திரன் என்று பொருள் சொல்லப்படுகின்றது. அதே போன்று நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தில்,

**“ கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற்சங்கம்**

**கொலையாழி தொழும்…”**(பெருமாள் திருமொழி, 654:1.8)

என வரும் திருவாய்மொழி வரியில் **கூனற்சங்கம்** என்னும் சொல் பயின்று வருகின்றது. இச்சொல் வளைந்த சங்கு என்னும் பொருளைத் தருகின்றது. பறாளை விநாயகர் பள்ளில்,

**“பன்னுஞ் சீதளப் பங்கய ராசியும்**

**பாண்டுக் கூனற் பணிலமுஞ் செங்கார்…”** (பறாளை விநாயகர் பள்ளு, 9:வரி4-5)

என வரும் வரிகளில் **கூனற் பணிலம்** என்பதற்கு வளைவினையுடைய சங்கு எனப்பொருள் கூறப்படுகின்றது.

கூனற்பலகை என்னும் சொற்பதம் தொடர்பான தகவல் ஒன்று அப்பத்ததியில் குளிர்த்தியின் வரலாறு என்ற பகுதியில் காணப்படுகின்றது

**“ …… கண்ணகைக்கும் கோவலர்க்கும் வதுவை முடிக்கிறபோது**

**கூனற்பண்ணினார்கள் அந்த கூனற்பலகை அறியாதவர்கள்**

**கோயிற்படிகடக்கொணாது அந்த கூனற்பலகை ஆகிறது……….” (கூ.**ப.வி. **கை.பி)**

என வரும் வரிகளில் கூனற்பலகை பற்றிய தகவலை அறியமுடிகின்றது. எனவே கூனற்பலகை என்பது வளைந்த பலகை என்னும் பொருளில் வருகின்றமை ஈண்டு நோக்கத்தக்கது.

கண்ணகையம்மன் வழிபாட்டிலே கலியாணச்சடங்கு பிரசித்தமானது. அது கோவலன், கண்ணகிக்கு நடைபெற்ற திருமணத்தை நினைவுபடுத்தும் விழாவாகும். அவற்றிலே மட்டக்களப்பின் பாரம்பரிய திருமண நடைமுறைகள் அனைத்தையும் காணமுடியும். அப்பிரதேச திருமண பாரம்பரியங்களில் மணமகன், மணமகள் ஆகியோரை வீட்டு வாசற்படியின் முன் பலகை ஒன்றின் மீது நிற்க வைத்து தாலி கட்டி மாலை மாற்றுவர். அடுத்து மணமகளின் சகோதரன் மணமக்களின் கால்களைக் கழுவிய பின்னர்தான் வீட்டின் உள்ளே நுழைவது வழக்கம். எனவே கண்ணகையம்மன் வழிபாட்டில் கலியாணச்சடங்கிற்கு வழங்கப்படுகின்ற முக்கியத்துவம் காரணமாக பத்ததியில் கலியாண விதிமுறைகளைக் கூறுகின்ற பிரதான பகுதி கூனற்பலகை என்ற பெயரால் அழைத்திருக்கக் கூடும்.

எனவே கண்ணகையம்மன் வழிபாடு பற்றிய விதிகளைக் கூறுகின்ற பத்ததி கூனற்பலகைப் பத்ததி என அழைக்கப்படுகின்றது. கூனற்பலகைப் பத்ததி பற்றி அறியாதவர்கள் பூசை செய்யத் தகவிலர் என்பது இப்பத்ததியினால் அறியமுடிகின்றது.

**சடங்குகள்**

கிழக்கிலங்கை பத்ததி வழிபாடுகளைச் சடங்கு என அழைப்பது வழக்கம். (முகுந்தன்,ச., 2022: 259-261) சடங்குகளை நெறிப்படுத்துபவை பத்ததிகள். மட்டகளப்பிலுள்ள சடங்குக் கோயில் ஒவ்வென்றுக்கும் தனித்துவமான ஒவ்வொரு பத்ததி உண்டு. அந்த வகையில் கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியில் கூனற்பலகை விதிமுறையே வழக்கிலுள்ளது. அப்பத்ததியில் கன்னிக்கால் வெட்டுதல், பஞ்சகௌவியம் கூட்டுதல் பற்றிக் கூறப்படுகின்றது. அத்துடன் கங்கை அரட்டுதல் (தீர்த்தம் எடுத்தல்) சாபம் நீக்குதல், கதவு திறத்தல், படிகடத்தல், விளக்கெண்ணெய் வார்த்தல், திரி இடுதல், விளக்கேற்றுதல் முதலியனவும் காணத்தக்கது. மேலும் அக்கினி பூசை, பிள்ளையார் பூசை, அம்மனுக்கு மடை கட்டுதல், திருமுழுக்குப் பண்ணுதல், அம்மனை சிங்காசனத்தில் வைத்தல், கும்பதானம், பிராண மந்திரம் என்பனவும் காணப்படுகின்றன. கும்பத்துக்கு, மஞ்சள், சந்தனம், பத்திரம் சாத்துதல், வயிரவர் விதிமுறை, பந்தல் போடல், பானைக்கு நூல் சுற்றுதல், நிலங்கட்டுதல் ஆகியன பற்றியும் கூறப்பட்டுள்ளது.

பொங்கல் பானை மன்றாடி அடுப்பில் வைத்தல் என்னும் பெரும் பகுதியில், விறகு வைத்தல், பால் வார்த்தல், அரிசி போடுதல், பொங்க விடாது தடுத்த பானையை மீண்டும் பொங்க விடுதல் என்பன காணப்படுகின்றன. அத்துடன் கண்ணகையம்மன் சடங்கு அமிர்தம் ஒப்புக்கொடுத்தல், நீறணிதல், அம்மன் கலசமாடுதல், பூசை ஒப்புக் கொடுத்தல், குளிர்த்தி ஆடுதல், மன்றாட்டு என்பனவற்றுடன் நிறைவு பெறுகின்றது. ஆய்வுப் பொருண்மையைக் கருத்திற்கொண்டு மேலே குறிப்பிடப்பட்ட சடங்கியற் கூறுகளுள் சிலவற்றை இங்கு எடுத்தாளுவது பொருத்தம்.

## பூசகர் விதிமுறை – படிகடத்தல்

மட்டக்களப்பின் பாரம்பரிய வழிபாட்டு மரபான பத்ததி வழிபாட்டினை நெறிப்படுத்துபவர்களைப் பொதுவாகப் பூசாரி என அழைக்கப்படுவது மரபு. பத்ததி வழிபாடுகளில் பூசகரின் வகிபாகம் பிரதானமானது. இவ்வழிபாடுகளை இயற்றும் பூசகரை இங்கு கட்டாடியார், கற்பகனார், பூசாரி, நம்பியார், கப்புவன் என்றெல்லாம் அழைக்கும் வழக்கம் உண்டு. கண்ணகையம்மன் கோயில்களில் பூசை செய்பவர்களைக் கட்டாடியார் எனவும் கற்பகனார் எனவும் அழைப்பது வழமை.

இப்பூசகர்கள் தந்தை வழிமுறையாக தந்தைக்குப்பின் மகனாகவும், மருமக்கள் தாய முறையில் மாமனுக்குப் பின் மருமகனாகவும் பூசை விதி முறைகளைக் கற்று அதன்படி பூசை செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வடிப்படையில் பூசை விதிமுறைகளைக் கற்றுத்தேர்ந்த ஒருவர் முதன் முதலாகக் கோயிற் கருவறையுள் உட்புகுதல் படி கடத்தல் எனப்படும். கருவறையுள் உட்புக முன்னர் கருவறை வாயிலில் மடை வைத்து, விதிப்படி வழிபாடியற்றியே உட்புகுதல் நடைபெறும். படிகடத்தலின் போது பின்வரும் மந்திரம் உச்சரிக்கப்படுகின்றது.

**“ ஓம் சிவமுனி கவுசிகன் வந்து திறக்கின்றேன்**
**கெங்கை நிறத்த கெருடா வவிடு – கோசல**
**கோமயமெடுத்து கோயில் பிரதிமாபண்ண**
**ஓம் அகோர அத்திறாயா நம”** (கூ.ப.வி. கை.பி)

என முடிகின்றது. இப்படிகடத்தல் என்னும் சடங்கியல் கூறானது சைவாகமங்கள் கூறும் ஆசாரிய அபிடேகத்துக்கு சரிநிகரானது.

## தீர்த்தம் எடுத்தல் - கங்கை வரட்டல்

பத்ததி வழிபாட்டில் ஆண்டுக்கொரு தடவை ஆலயக்கதவு திறக்க முன்னர் ஆலய வளவினை காவல் பண்ணுவதற்காகச் செய்யும் சடங்கு மண்டபம் காவல் பண்ணுதல் எனப்படும். ஆகம வழிபாட்டில் காவல் செய்யும் கிரியை கிராமசாந்தி, வாஸ்த்து சாந்தி என அழைக்கப்படுவது போன்று பத்ததி வழிபாட்டில் காவல் பண்ணும் வழிபாடு மண்டபம் காவல் பண்ணுதல் என அழைக்கப்படுகின்றது. (குணபாலசிங்கம், வ., 2008:283) இச்சடங்கில் ஆற்று நீர் அல்லது கடல் நீர் அல்லது குளத்து நீர் அல்லது கிணற்று நீர் எடுத்து மண்டபம் காவல் பண்ணுதல் சடங்கு நடைபெறும். இதன் பொருட்டு கங்கை வரட்டல் என்னும் பகுதி இடம்பெறுகின்றது. கங்கை வரட்டல் என்பது கங்கையை வரவழைத்தல் எனக்கொள்ள முடியும். இச்சடங்கின் போது பின்வரும் மந்திரம் உச்சரிக்கப்படுகின்றது.

**"ஓம் கங்கை சர்வ கங்கை ஜமுனை**

**பராபர சிவ கங்கை அருணாச்சலாய நம."** (கூ.ப.வி. கை.பி)

இதையொத்த சம்பிரதாயம் இங்கு வழக்கிலுள்ள ஏனைய பத்ததிகளிலும் கூறப்பட்டுள்ளது. ஆறுமுகத்தான் குடியிருப்பு பெரியதம்பிரான் பத்ததி, தாழங்குடா பரமநயினார் பத்ததி, ஏறாவூர் காளி கோயில் பத்ததி, தாழங்குடா பெரியதம்பிரான் பத்ததி என்பனவற்றில் இச்சடங்கு முறையினைக் காணமுடிகின்றது.

**கதவு திறத்தல்**

பத்ததி வழிபாட்டில் வருடாந்த சடங்கின் முதல் நாள் நிகழ்வு கதவு திறத்தல் என அழைக்கப்படும். ஆண்டுக்கொரு தடவை கதவு திறக்கப்பட்டு, கோயிற் சடங்குகள் நடைபெறுவதனால். இச்சடங்கு பிரதான இடத்தினை வகிக்கின்றது. பத்ததி வழிபாட்டில் வருடாந்தச் சடங்கின் முதல் நாளான கதவு திறத்தல் அன்று அனைத்துத் பரிகலங்களையும் (துணைத் தெய்வங்கள்)அழைத்து தொடர்ந்து நடைபெறும் சடங்குகள் தடையீடின்றி நடைபெற அனுமதி கோருவதாக அமைந்துள்ளது. அதற்குரிய மந்திரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**" ஓம் திருக்கை திருக்கதவு திருப்படி**
**திருவாசனம் நம ஓம் அரசூர**
**பரம குருவே நம ஓம் பரம திக்திக் குருவே நம**
**ஓம் மகா விருட்சாய பூமாதேவி பொறுமை**
**பொறுமை பூமா தேவி**
**ஓம் பூதப்பிரேதம் நமஸ்தே நமஸ்த்து. "** (கூ.ப.வி. கை.பி)

**கும்பம் வைத்தல்**

பத்ததி வழிபாட்டு முறையிலே விக்கிரகங்களை விட கும்பங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. கும்பங்கள் பொதுவாக மாவிலைகளால் அன்றி வேப்பிலைகளாலேயே வைக்கப்படுகின்றன. கூனற்பலகை விதிமுறையில் கும்பம் வைத்தல் பற்றிய விரிவான தகவல்களைக் காணமுடிகின்றது. நீர் நிரப்பப்பட்ட கும்ப முட்டிக்கு நூல் சுற்றி அதனுள் பொன், வெள்ளி இடப்பட்டு, கும்ப முட்டிக்குள் மாங்கனி வைத்து அம்மனை எழுந்தருளப்பண்ணுவர். மாங்கனி கண்ணகையம்மன் பிறத்தலுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. அத்துடன் வளத்தின் குறியீடாகவும் இதனைக் கொள்ள முடிகின்றது. அம்மனின் இரண்டு கால்களுக்கும் இரண்டு மடை வைத்து, அவற்றிலே திருச்சிலம்பு வைத்து வழிபாடு இயற்றப்பட வேண்டும் எனக்கூறப்படுகின்றது.

**மடை வைத்தல்**

பத்ததி வழிபாட்டில் மடை வைத்தல் பிரதான இடத்தினை வகிக்கின்றது. பத்ததி வழிபாடு மடைகளால் ஆனது. கோயிலில் இருக்கும் பிரதான தெய்வத்திற்கும் துணைத் தெய்வங்களுக்கும் அவ்வவ் தெய்வங்களுக்குரிய யந்திரம் தாவி மடைப் பிரிவுகளுக்கு ஏற்ப வெள்ளைச் சேலை விரித்து வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பூக்கள், கமுகம் பாளை முதலிய பொருட்களைக் கொண்டு தயார் செய்து மடை வைக்கப்படுகின்றது. தெய்வங்களின் முதன்மைக்குத் தகுந்தவாறு மடைகளின் எண்ணிக்கையில் வேறுபாடு காணத்தக்கது. கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதிமுறையில் தெய்வங்களுக்குரிய மடைப்பிரிவுகள் மேல்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கண்ணகையம்மன் - 3

தார்கோதை – 1

செந்தாமரைக்கன்னி - 1

மாதவி - 1

நாககன்னி - 1

செம்பகக்கன்னி - 1

சித்திராபதி - 1

துயிற்கன்னி – 1

அம்மாளைக்கன்னி - 1

ஆய்ச்சியர் - 5

ஆலாத்திக்கன்னி - 1

சந்திரக்கன்னி - 1

கோவலர் - 1

சூரியக்கன்னி - 1

கொம்பன்கன்னி - 1

பஞ்ச சக்தி - 5

கொம்பு கன்னி - 1

திருவுடையாள் - 1

அட்ட சக்தி - 8

வித்தைவல்லாள் - 1

ஆகாசபத்தினி 51பேர் - 51

வண்ணமகள் - 1

தோகைபத்தினி 900பேர்- 900

துணைக்கன்னியர்க்கு - 900

வயந்தமாலை - 1

மோகக்குழலி3000பேர் - 3000
மங்கல விறுமர் - 1
வாசற்காவலுக்கு 1
வயிரவர் - 1
பூதகிங்கிலியர் - 1
மாத்தாண்டர் - 1

எனத் தெய்வங்களுக்கு மொத்தம் 4895 மடை வைக்கப்படுகின்றமை அப்பத்ததி விதிகளால் அறியமுடிகின்றது.

**மந்திரமும் பாவனையும்**

பண்டைக்கால சமய – சடங்கு நிகழ்வுகளில் மந்திரம் பிரிக்கவியலாத ஒரு கூறாக விளங்கியுள்ளது. இயற்கையுடன் இயைந்து வாழப் பழகிய மக்கள் சில சந்தர்ப்பங்களில் அதனால் அச்சுறுத்தப்பட்டனர். அவர்களால் அவற்றிலிருந்து தங்களை விடுவிக்க முடியவில்லை. இயற்கையைத் தம் வசப்படுத்துவதற்குச் சில சூத்திரங்களை அல்லது வாய்ப்பாடுகளைச் சுருக்கி உச்சரித்தனர். அவ்வாறு அவர்களுடைய சூத்திரமும் பாவனையும் முறையாக அமையும் போது இயற்கையின் ஆற்றலை கையகப்படுத்தலாம் என்னும் நிலையினை எய்தினர். தாம் நினைத்த காரியம் நிறைவேறிய மனோபாவத்தினை அவர்கள் பெறலாயினர். (பக்தவத்சலபாரதி, 2014:86) அதன் அறாத்தொடர்ச்சியினைக் கண்ணகையம்மன் வழிபாட்டினூடாக இன்றும் காணமுடிகின்றமை குறிப்பிடற்குரியது. வைகாசி மாதம் இலங்கையின் உலர்வலயக் காலநிலையில் வெப்பம் மிகுந்த காலமாகும். கண்ணகையம்மன் குளிர்த்தி நிறைவடைந்தால்தான் புழுக்கம் குறையும் என்பது அப்பிராந்திய மக்களது அசையாத நம்பிக்கை. இந்நம்பிக்கையில் அதிக செல்வாக்கினைச் செலுத்துவது சடங்குப்பாடல்களும் மந்திரப்பாவனையும் ஆகும்.

கண்ணகையம்மன் வழிபாடே மந்திரங்களால் ஆனது என்னும் அளவிற்கு மந்திரம் அவ்வழிபாட்டில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றது. சடங்கியல் கூறு ஒவ்வொன்றிலும் மந்திரப்பாவனை உண்டு. அவை சடங்குகளின் இயல்புக்கு ஏற்ப வேறுபடுகின்றன. உதாரணமாக படிகடத்தலுக்குரிய மந்திரமும் பாவனையும் ஒருமுறையில அமைய கதவுதிறத்தலுக்குரிய மந்திரமும் பாவனையும் இன்னுமொரு முறையில் செய்யப்படுகின்றன. இங்கு அம்மனை ஆசனத்தில் ஏற்றலுக்குரிய மந்திரம் ஒன்றினை நோக்குகையில்,

**“ஓம் ஆதி ஆசனம் அகோர ஆசனம் சிவஆசனம்**
**சிறிங்காசனம் ரெட்ன ஆசனம் சிவகுரு ஆசனம்**
**சிங்காசனம் கமலபத்தினி கண்ணகையே நம”** (கூ.ப.வி,கை.பி)

என அமைந்துள்ளது. இம்மந்திரத்தில் ஆசனம் என்ற சொல் பலதடவைகள் உச்சரிக்கப்படுகின்றது. இதையொத்த பல மந்திரப் பாவனைகளைக் கூனற்பலகை விதிமுறையில் காணமுடிகின்றது.

**யந்திரம்**

மட்டக்களப்பு தேசத்துக் கண்ணகையம்மன் சடங்குகளில் யந்திரங்கள் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. தெய்வ சக்தியை வெளிக்கொணர்வதற்கான மந்திரச்செயற்பாட்டின் போது உபயோகிக்கப்படும் ஊடகமாகவே யந்திரம் கொள்ளப்படுகின்றது. சடங்கியற் கூறுகள் ஒவ்வொன்றிலும் யந்திரங்களின் பயன்பாடு உள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது. யந்திரங்கள் தெய்வ வழிபாட்டுச் சடங்குத் தேவைகளுக்காக மாத்திரம் அன்றி வாழ்வியல் சடங்குகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளிலும் உபயோகிக்கப்படுகின்றன. சடங்கின் இயல்பிற்கேற்ப யந்திரங்களின் பயன்பாடும் வேறுபடுகின்றன. உதாரணமாக அடுப்பு மூட்டுவதற்குக் கீறப்படும் யந்திரம் ஒருவகை. கும்பம் வைப்பதற்குக் கீறப்படும் யந்திரம் இன்னொருவகை. மந்திரமும் யந்திரமும் ஒன்றையொன்று சார்ந்ததாகவே காணப்படுகின்றன. பத்ததிகளில் கூறப்பட்டதற்கு அமைவாகவே பூசாரிகளால் யந்திரங்கள் வரையப்படுகின்றன. அறிவும் திறனும் அனுபவமும் உள்ள பூசாரிகள் அந்த யந்திரங்களை மனதிலிருத்திச் சடங்குக் காலங்களில் உபயோகிப்பதை அவதானிக்கமுடிகின்றது.

யந்திரங்கள் செப்புத்தகடு, சீலைத்துணி, காகிதம், மணற்றரை போன்றவற்றில் வரையப்படுகின்றன. பெரும்பாலும் கோயிற் சடங்குக் காலங்களில் மணற்றரையிலும், அரிசியிலுமே வரையப்படுகின்றன. வரையப்படும் யந்திரங்கள் கோட்டுருவங்களாகவே காணப்படுகின்றன. யந்திரங்கள் அறுகோணம், வட்டம், முக்கோணம், சதுரம், அரைவட்டம் ஆகிய கேத்திர கணித உருக்களால் ஆனவை. அவை சடங்கியற் கூறுகளுக்குத் தகுந்த வகையில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றிலே நமசிவாய, சிவாயநம ஆகிய தூல, சூக்கும பஞ்சாட்சரங்கள் எழுதப்படுவதுடன் குறித்த தெய்வத்தினை வசப்படுத்துவதற்குரிய குறிப்பிட்ட எழுத்துக்களும் வரையப்படுகின்றன. வரையப்படுகின்ற யந்திரங்களின் அளவுப் பிரமாணம், பிரயோகம் என்பனவற்றை நோக்கும் போது அவற்றினை வரைவோரின் கணிதப் புலமையை வெளிக்காண முடிகின்றது.

**மொழிநடை**

கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதிமுறையில் செயல்முறை உரைநடைவடிவிலும், மந்திரங்கள் செய்யுள் வடிவிலும் அமைந்துள்ளன. அவை இரண்டும் பெரும்பாலும் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடற்குரியது.

அபிஷேகம், அர்ச்சனை, பஞ்சாட்சரம், அஷ்டோத்திரம், நமஸ்தே, நமஹ ஆகிய சொற்பதங்கள் வடமொழியில் அமைந்துள்ளதுடன். அவற்றிலே பெரும்பாலான சொற்பதங்கள் தமிழ் மொழியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கலந்துரையாடலும் பரிந்துரையும்**

வழிபாட்டு நூல் என்ற வகையில் பத்ததிகளுக்கு முக்கியத்துவம் உணரப்படுகின்றது. இப்பத்ததிகள் ஆரம்ப காலங்களில் பெரும்பாலும் சந்ததி அடிப்படையில் இரகசியமாகப் பேணப்பட்டு வந்துள்ளமை புலப்படுகின்றது. அம்மரபின் தொடர்ச்சியை இன்றும் காணமுடிகின்றது. தொடர்ந்து எழுத்தறிவும், சடங்கு விதிமுறை பற்றிய தெளிவும் ஏற்பட்டதன் விளைவாக ஏடுகளிலும், காகிதங்களிலும் ஆவணப்படுத்தி வைக்கும் முறைமை ஒன்று உருவாகியுள்ளது. அவை உரித்துடையோர் தவிர்ந்த பிறர் கைகளுக்குப் போவதைப் பத்ததிகளைப் பேணிவருபவர்கள் விரும்பியதாகத் தெரியவில்லை. இதன் காரணமாகப் பல பத்ததிகள் இன்று இயற்கை அனர்த்தங்களாலும் யுத்த அனர்த்தங்களாலும் அழிந்து போயுள்ளன. கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியைப் பேணுபவர்கள் இதற்கு விதிவிலக்கு. இப்பத்ததி தற்காலம் அச்சுவாகனம் ஏறியுள்ளது. அதற்கு முன்னோடியாக நின்று உழைத்தவர் இருவர். ஒருவர் அமரத்துவமடைந்த க. ஆறுமுகம் மற்றையவர் பேராசிரியர் சி.மௌனகுரு.

பத்ததி வழிபாடுகள் காலம் காலமாக சமூக வாழ்வியலில் ஒரு பகுதியாக இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருவதனால் அவற்றை ஒரு வாழும் பண்பாடாகவே கருத வேண்டும். சமூக வாழ்வியலில் பல்வேறு விழுமியங்களையும் தாங்கிய பத்ததி வழிபாடுகள் சமகால சமூகச் செயற்பாட்டில் தமது முக்கியத்துவத்தை இழந்து வருகின்றன. வெளியுலகிற்கு அவை பற்றிய தெளிவும், விளக்கமும் குறைவு. இவ்வாறான ஒரு சூழலில் அவைகளின் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படுதல் வேண்டும். வெளிக்கொணரப்படுதலுக்கு இவைகளை ஆவணப்படுத்துவது அவசியமாகும்.

கிழக்கிலங்கை வழிபாட்டுக்குரிய பத்ததிகள் ஆரம்ப காலத்தில் வாய்மொழி மரபாகப் பேணப்பட்டு வந்துள்ளன. பின்னர் அவைகளில் சில ஏடுகளில் எழுதி வைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளன. காலப்போக்கிலே இப்பத்ததிகள் உருக்குலைந்து போகலாயின. பாரம்பரிய வழிபாடுகளின் பொக்கிசமாக விளங்கும் பத்ததிகளை,

1. கையெழுத்துப் பிரதிகள்
2. செப்புப்பட்டயப் பதிவுகள்
3. அச்சுப் பிரதிகள்
4. ஒலி நாடாப் பதிவுகள்

5. இறுவட்டுப் பதிவுப் பிரதிகள்
6. கணினிப் பதிவுகள்
7. இணையத்தளப் பதிவுகள்

முதலிய முறைகளில் ஆவணப்படுத்தலாம்.

இவ்வாறு பத்ததிகள் ஆவணப்படுத்தப்படும் போது பத்ததிகளின் வகைமைகளை அறிந்து கொள்ளவும் இப்பத்ததிகளுக்கு இடையேயான பொதுமைகளையும், தனித்தன்மைகளையும் இனங்கண்டு கொள்ளவும் முடியும் என்பதுடன் பத்ததிகளின் உப பிரிவுகளை அடையாளம் கண்டுகொள்ளவும் இயலும். மற்றும் பத்ததிகளின் மொழிப்பயன்பாடு, அமைப்பு, ஓசை, அவற்றின் வித்துவத்தன்மை முதலியவைகளையும் இனங்காணமுடியும்.

**நிறைவுரை**

சமூக மாற்றத்திற்கேற்ப பண்பாடுகள் மாறும் இயல்பின. மட்டக்களப்பு தேசத்தின் இந்துப்பண்பாட்டிற்கும் இது பொருந்தும். எனவே மாறும் பண்பாட்டில் பத்ததிகள் நிலைத்திருக்கும் என்பது நிச்சயம் அல்ல. இந்நிலையில் பத்ததிகளின் ஆவணப்படுத்தல் முக்கிய செயற்பாடாகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு தேசமெங்கும் விரவிக் காணப்படுகின்ற இவ்வழிபாடுகளைக் கூர்ந்து அவதானிக்கும்போது இவ்வழிபாடுகளின் தனித்தன்மைகளை அறிய முடிகின்றது. அத்துடன் இவ்வழிபாட்டுக்கு ஆதாரமாக விளங்குகின்ற பத்ததிகளைப் பார்வையிடுவதற்கும் அதிலுள்ள அம்சங்களை அறிவதற்கும் இடர்பாடுகள் பல உள்ளன. இருப்பினும் சிலர் பத்ததிகளை போட்டோ பிரதிகளாக தந்துதவியமை குறிப்பிடத்தக்கது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு பத்ததிகளை ஆவணப்படுத்தும் முயற்சிகள் தொடர்கின்றன. மட்டக்களப்பில் பல பத்ததிகள் வாய்மொழி மரபாகவும், கையெழுத்துப் பிரதியாகவும் காணப்படுகின்றவேளையில் முதன்முதலில் கண்ணகையம்மன் பத்ததியும் பாடல்களும் என்ற தலைப்பில் கன்னன் குடாவைச் சேர்ந்த க. ஆறுமுகம் என்பவர் அச்சில் வெளியிட்டுள்ளமை பத்ததிகளை ஆவணப்படுத்தலுக்கு ஓர் முன்மாதிரியாகும்.

பத்ததிகளை ஆவணப்படுத்துவதற்கு இலங்கையின் தமிழ், சமயம் வளர்க்கும் நோக்கில் செயற்படும் சமூக நிறுவனங்கள் முன்வரவேண்டும். அவ்வாறு முன்வருவதனால் அருகிவரும் தமிழர் பண்பாட்டினையும் பாரம்பரிய வழிபாடுகளையும் பாதுகாக்க முடியும்.

## உசாத்துணை

### மூலநூல்கள்

1. பறாளை விநாயகர் பள்ளு, (2016) பிரதேச செயலகம், வலி.மேற்கு சங்கானை, யாழ்ப்பாணம்.
2. நாலாயிர திவ்விய பிரபந்தம் முதலாயிரம் - இரண்டாம் பகுதி, (2012), ராதே கிருஷ்ணா வெளியீடு, சென்னை.

**அகராதி**

Visvanathapillai, V. (பதி)., (2004), தமிழ் ஆங்கில அகராதி, Asian Educational Services, Chennai

**பத்ததி**

கூனற்பலகை விதிமுறை, கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததி

**ஏனைய நூல்கள்**

ஆறுமுகம், க., (பதி.) (2008), கண்ணகையம்மன் பத்ததியும் பாடல்களும், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

இன்பமோகன்,வ., (2012), கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

குணபாலசிங்கம்,வ., (2015) இலங்கையில் முருக வழிபாடு -கிழக்கிலங்கையில் முருக வழிபாட்டு முறைமைகள் பற்றிய சிறப்பாய்வு, கலாநிதிப்பட்ட ஆய்வேடு. (அச்சில் வராதது) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

முகுந்தன்,ச., (2022), இந்து நாகரிகம் ஓர் அறிமுகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

மௌனகுரு,சி., (2003), மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு, 2ஆவது இந்து மாநாட்டுச்சிறப்பு மலர், மட்டக்களப்பு.

மௌனகுரு,சி., (2014), மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.